பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

ஸ்ரீ பியாரிலால்ஜீயால் நடத்தப்படும் காந்தியடிகளின் ஆங்கிலப் பத்திரிகையை அனுமதியுடன் தமிழாக்கியது.

11 ] சென்னை—ஞாயிறு, ஜூன் 23, 1946. [ விலை. அணா. 2

## அணுவில் அண்டம்

திரு. கே. நடராஜன் கீழ்க்கண்ட கடிதத்தை மூன்று மாதங்களுக்கு முன் அனுப்பினார் :—

"திருவிதாங்கூர் ஆலயப் பிரவேசப் பிரகடனத்தைப் பற்றி திரு. மகாதேவ தேசாய் எழுதியுள்ள நூலில் தாங்கள் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் பல இடங்களில் நிகழ்த்திய பிரசங்கங்கள் காணப்படுகின்றன. ஈஷோபனிஷத்திலுள்ள முதல் ஸ்லோகம் இருந்தால் போதும், மற்ற சாஸ்திரங்கள் எல்லாம் அழிந்து போனாலும் பாதகமில்லை, ஹிந்து மதம் அழிந்து போகாமல் நிலைத்து நிற்கும் என்று தாங்கள் கூறியிருக்கிறீர்கள். கவிஞர்பிரான் ரவீந்திரருடைய தந்தையார் தேவேந்திரநாத் தாகூருடைய வாழ்வில் ஜீவநாடி போன்ற மாறுதல் செய்தது அந்த ஸ்லோகம்தான் என்பதை அறிவீர்கள் என்று நம்புகிறேன். தேவேந்திர நாதருடைய தந்தையார் இறக்கும் பொழுது தம்முடைய குடும்பச் சொத்தை அதிகமாகக் கடனுக்கு உள்ளாக்கியிருந்தார். அதனால் தேவேந்திரர் அப்போது அதிகமாக மனம் சோர்ந்து போனார். அந்த நிலைமையிலிருந்த பொழுது ஒரு நாள் அவர் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்துக்குக் காற்றில் ஒரு சிறு காகிதத் துண்டு பறந்து வந்தது. அதை எடுத்துப் பார்த்தார். அது சமஸ்கிருதத்தில் எழுதியிருந்தது. அவருக்கு அப்பொழுது சமஸ்கிருதம் தெரியாது. தம்முடைய வீட்டுப் பண்டிதரிடம் காட்டினார். அதில் ஈஷோபனிஷத்தின் முதல் ஸ்லோகம் எழுதப்பட்டிருந்தது.

"அதன் பொருளைக் கேட்டதும் என்னுடைய ஆன்மாவின்மீது அமிர்தம் வார்த்தது போலிருந்தது" என்று மகரிஷி தேவேந்திரர் தம்முடைய சுய சரிதையில் கூறியிருக்கிறார்.

துறப்பதன் மூலம் இன்பம் துய்ப்பது என்னும் சொற்றொடர் எனக்கு வெகு நாளாக விளங்காமலே இருந்து வந்தது. ஆனால் ஒரு நாள் இரவு அந்தச் சொற்றொடர் நம்முடைய தினசரி அநுபவத்தையே கூறுவதாகத் திடீரென்று என்னுடைய மனத்தில் பட்டது. எதில் அதிகமான பற்று வைத்திருக்கிறோமோ அதைத் துறந்து விடுவதினும் பெரிய ஆனந்தம் வேறுண்டோ?"

இந்தக் கடிதம்பற்றி இதற்கு முன்னதாகவே எழுத எண்ணியும் இதுவரை முடியாமற் போய்விட்டது. ஆயினும் கடிதத்தில் கண்ட விஷயம் அமரத்துவமுடையதாகையால், அவசரப்பட்டு எழுதாததால் ஒன்றும் கெட்டுப் போய் விடவில்லை. நான் அந்த ஸ்லோகத்துக்கு இலக்கணத்துக்குப் பொருந்தாத முறையில் செய்துள்ள வியாக்கியானப் படியே நடந்துவர என்னாலியன்ற முயற்சிகள் அனைத்தும் செய்து வருகிறேன். நான் அதிகமான புஸ்தகங்கள் படிக்கும் வழக்கமில்லாதவனாகையிருப்பதால் மகரிஷி தேவேந்திருடைய சரிதையிலிருந்து திரு. நடராஜன் எழுதியுள்ள விஷயம் எனக்கு இதுவரைத் தெரியாது. மதம் என்று கூறினும் தூய்மையான ஹிந்து மதம் என்று கூறினும் இரண்டும் எனக்கு ஒன்றேதான். ஆகவே மதம் அளிக்கக்கூடிய உதவியை எல்லாம் அந்த ஈஷோபனிஷத்தின் முதல் ஸ்லோகமே அளிக்கும் என்ற என்னுடைய நம்பிக்கைக்கு அது அரண் செய்கின்றது. தினந்தோறும் காலையில் பிரார்த்தனை செய்யும் சமயத்தில் கீதையைப் பாராயணம் செய்கிறோம். அதிலுள்ள 18 அத்தியாயங்களும் ஒரு வாரத்தில் பாராயணம் செய்து விடப்படுகின்றன. இந்த விதமாகப் பல வருஷங்களாக நடந்து வருகின்றது. கீதையானது ஈஷோபனிஷத்தின் முதல் ஸ்லோகத்தின் பாஷ்யமாக அமைந்திருக்கின்றது. திரு. நடராஜனுக்குத் திடீரென்று பட்ட வியாக்கியானம் உண்மையின் ஒரு பாகத்தையே காட்டுவதாகத் தோன்றுகிறது. நான் கூறுவது தவறாக இருக்கலாம். ஆனால் நான் அறிந்த மட்டில் அவர் கூறும் வியாக்கியானம் அனுதினமும் சர்வ சாதாரணமாக அனுசரித்துவரும் தியாகமாகிய புராதனமான கொள்கையைத் தவிர வேறன்று. ஒரு உதாரணம் தருகின்றேன். தாய்மார்கள் தங்கள் குழந்தைகளுக்காகச் சகலசுகங்களையும் தியாகம் செய்கிறார்கள். இந்த விஷயம் புதியதன்று. ஈஷோபனிஷத்தின் ஸ்லோகம் இந்த விஷயத்தைத் திரும்பக் கூறுவதற்காகச் சொல்லப்பட்டதன்று. அந்த ஸ்லோகப்படி நடப்பது என்பது கிறிஸ்தவ வேதத்தின் புதிய ஏற்பாட்டில் கூறியுள்ளதும் இந்து சமயத்தில் "பிரம்ம சமர்ப்பணம்" என்று கூறியுள்ளதுமான "புனர் ஜன்மமே"யாகும். ஆதலால் அந்த ஸ்லோகத்துக்கு ஒரே ஒரு பொருள்தான் உண்டு என்பது என்னுடைய அபிப்பிராயம். நம்முடையதென்று எண்ணிக்கொள்ளும் ஒவ்வொன்றையும் கடவுளுடையதே என்பதை ஏற்றுக்கொண்டு, வாழ்வுக்கு இன்றியமையாத அளவுமட்டுமே அவற்றை அனுபவித்தல் வேண்டும். அதாவது பகவத்கீதையில் கூறியுள்ளபடி நாம் அணுவளவுகூடப் பற்று இல்லாமல் வாழவேண்டும். அந்த நிஷ்காம கர்மக்கொள்கையைத்தான் அந்த ஸ்லோகம் உபதேசிக்கின்றது. அத்தகைய வாழ்வுதான் வாழ்வு.

புது டில்லி,
13—6—46

மோ. க. காந்தி

## பாதி முறை

நம்முடைய தேசத்தில் தசாம்ச நாணய முறையை ஏற்படுத்தும் நோக்கத்துடன் டில்லி மத்திய சட்ட சபையில் ஒரு மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தைப் பிற்போக்குடையதாகவே இந்தச் சர்வ கலாசாலையார் கருதுகிறார்கள். இந்தியாவில் காணப்படும் நாணயங்களும் நிறைகளும் அளவைகளும் விஞ்ஞான ரீதியாகவும் ஒரே மாதிரியாக

வும் 16 பாகம் பிரிக்கும் முறையிலும் அமைந்திருக்கின்றன. இந்த முறையினால் விலையையோ வண்டிச் சத்தத்தையோ கணக்கிடுவது வெகு சுலபமாக இருக்கின்றது. அதனால் தசாம்ச நாணய முறையைக் கொண்டு வருவது வேறு விதமாகக் கண்டிக்கப்படாவிட்டாலும் அகாலமானது என்று தைரியமாகக் கூறலாம். நிறைகளையும் அளவைகளையும் தசாம்ச மாக்கும்பொழுது நாணயங்களையும் தசாம்ச மாக்கலாம். அப்படிச் செய்யாமல் நாணயங்களைமட்டும் தசாம்ச மாக்கினால் பொது ஜனங்களுக்குக் கஷ்டமும் நஷ்டமுமே உண்டாகும்.

கீழ்க்கண்டவைகளைப் படித்து பார்த்தவுடனேயே இப்பொழுதுள்ள முறை எவ்வளவு வசதியானது என்பது விளங்கும் :—

(1) ரூபாய்—2 அரை ரூ—4 கால் ரூ—8 அரைக்கால் ரூ—16 ஒரு அணா.

(2) சேர்—2 அரைச் சேர்—4 கால் சேர்,—8 ஆழாக்கு,—16 வீசம் படி.

(3) கெஜம்—2 முழம்—4 சாண்—8 அரைச் சாண்—16 கால் சாண்.

(4) மைல்—2 அரை மைல்—4 கால் மைல்—8 பர்லாங்.

இப்போதுள்ள முறையில் விலைகளைக் கணக்கிடுவதற்கு எவ்வித யோசனையும் தேவையில்லை. உடனேயே தெரிந்துவிடும். ஆனால் ஆழாக்குத் தானியமோ அரைக்கால் கெஜத் துணியோ வாங்கினால் தசாம்ச நாணய முறையில் விலையைக் கணக்கிடுவது பாமர மக்களுக்கு நிரம்பக் கஷ்டமா யிருக்கும். அதனால் ஜனங்கள் அதை ஆதரிக்கப் போவதில்லை என்று நிச்சயம் செய்து கொள்ளலாம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அமெரிக்காவிலிருந்து "பாடசாலை விஞ்ஞானமும் கணிதமும்" என்னும் பெயருடன் வந்துள்ள மாஸிகையைக் குறிப்பிட விரும்புகிறேன். அதிலுள்ள சில பகுதிகளைக் கீழே தருகிறேன் :—

"அரை என்பதுதான் எல்லோர்க்கும் மிக எளிதாகத் தெரிந்து கொள்ளக் கூடிய பின்னமாகும். கால் என்பது அரையில் பாதி, அரைக்கால் என்பது காலில் பாதி. இப்படிப் பாதியாக்கிக் கொண்டே போகலாம்.

அளவைகளிலும் நாணயங்களிலும் "அரை" என்னும் முறையை உபயோகித்தால் பின்னங்களைப் பற்றிய கஷ்டங்கள் ஒழிந்து போகும்.

இப்பொழுது "அரை" முறையை உபயோகிப்பது "அரை" என்னும் தாய் மொழியில் சிந்தித்து "தசாம்சம்" என்னும் அன்னிய மொழியில் எழுதுவது போன்றதாகவே இருக்கிறது.

அன்னிய தசாம்ச முறையைக் கற்றுக் கொள்ளவும் உபயோகிக்கவும் வேண்டும் என்று கூறுகிறார்கள். இது அன்னிய மொழியைக் கற்றுக் கொள்ளும் விஷயமா யில்லை, நம்முடைய சிந்தனை அமைப்பு முழுவதையும் மாற்றி விடுவதாகவே இருக்கின்றது. நம்முடைய மனமும் உடலும் இயன்ற மட்டும் தசாம்சப் பிரிவினையை விட்டு விலகுவதாகவே காணப்படுகின்றன."

உண்மை யாதெனில் இப்பொழுது அமெரிக்க ஆசிரிய நிபுணர்கள் "அரை—கால்" முறையையே கணிதத்துக்கும் அளவைகளுக்கும் உபயோகிக்க வேண்டும் என்று எண்ண ஆரம்பித்திருக்கிறார்கள். ஆதலால் உலகத்தில் மற்ற நாடுகளிலுள்ள அறிஞர்கள் தசாம்ச முறையை விட்டுவிட்டு அதைவிட அதிகமான விஞ்ஞான ரீதியுடையதாகவும் மனித இயல்புக்கு ஒத்ததாகவுமுள்ள முறையை ஏற்படுத்தத் திட்டம் போட்டு வரும் இந்த நாளில் நாம் தசாம்ச முறையை ஏற்படுத்த எண்ணுவது பிற்போக்கான காரியமாகவே எனக்குத் தோன்றுகிறது.

ஸ்ரீ ரங் பிஹாரி லால்,
உதவி உப-சான்ஸலர்,
காசி சர்வ கலாசாலை.

## காந்தியடிகளின் நூல் நிலையம்

காந்தியடிகள் தம்முடைய கக்கூசை "நூல் நிலையம்" என்றே கூறுவார். அவர் கூறுவது மட்டுமன்று. உண்மையில் அது அவ்விதமாகவே இருக்கவும் செய்கின்றது. அங்கேதான் அவர் அதிகமாகப் படிக்கவும் செய்கிறார்; சிந்திக்கவும் செய்கிறார். அங்குதான் அவருக்குத் தனிமை கிடைக்கின்றது. அங்கேயே அவர் சிக்கலான பிரச்னைகளைப் பற்றிச் சிந்தித்து முடிவுக்கு வருவது வழக்கம்.

காந்தியடிகள் தம் கக்கூசை "நூல் நிலையம்" என்று கூற ஒரு நண்பரிடமிருந்தே கற்றுக்கொண்டார். அந்த நண்பர் சௌகர்யமாக உட்கார்ந்து படிக்கத் தகுந்த வண்ணம் தம் கக்கூசை அமைத்திருப்பதைப்பற்றிக் காந்தியடிகள் அடிக்கடி சந்தோஷத்துடன் கூறுவர். அந்த நண்பர் கக்கூசில் ஒரு சிறு நூல்பீரோவையும் அமைத்து வைத்திருந்தார்.

முஸோரியில் நடந்த ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியடிகள் கூறினார் :—

"பரம ஏழைகளுடைய கக்கூசுகள்கூட நூல் நிலையத்தைப்போலவும் அடுக்களையைப் போலவும் சுத்தமாயும் அழகாயும் இருக்கவேண்டும். அழுக்கும் நாற்றமும் அணுவளவுகூட இருக்கக்கூடாது. நான் என்னவோ கேலியாகக் கூறுவதாக எண்ண வேண்டாம். உடல் சுத்தம் மட்டுமன்றி சுற்றுப்புறச் சுத்தமும் நாடுவோரே சமூக வாழ்க்கைக்கு ஏற்றவர் ஆவர். நாம் சுத்தத்தை ஒரு கிரியையாகக் கூடச் செய்திருக்கின்றோம். ஆனாலுங் கூட நாம் இன்னும் சுத்த உணர்ச்சியைப் பெற்று விட்டதாகக் கூறுவதற்கில்லை. நம்முடைய புனிதமான நதிகளை ஆபாசப்படுத்துகின்றோம். கங்கை ஜலத்தைப் புனிதமானதாகவும் பாபங்களை நீக்கக் கூடியதாகவும் கருதுகிறோம். ஜலம் உடலைச் சுத்தம் செய்வதுபோல் அறவாழ்வாகிய ஜலத்தால் ஆன்மாவைச் சுத்தப்படுத்த வேண்டும் என்பதே அதன் தாத்பரியம். ஆனால் புனிதமான நதி ஜலத்தை ஆபாசப்படுத்தினால் அப்புறம் அந்த ஜலம் ஆன்மாவை எப்படிச் சுத்தம் செய்ய இயலும்?

எல்லா ஜீவனும் ஒன்றே. நம்முடைய வீட்டைச் சுத்தம் செய்து கொண்டு பக்கத்து வீட்டின் சுத்தத்தைப் பற்றிக் கவனியாதிருந்தால் தொத்து நோய் போன்றவைகளை அனுபவிக்கவே நேரும். இதர நாடுகளிலிருந்து அவைகளை ஓட்டிவிட்டார்கள். இந்தியாவிற்கு மட்டும் அவை திரும்பத் திரும்ப வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் நாம் மட்டும் நம்முடைய சுத்தத்தைக் கவனிப்பதுபோலவே பக்கத்திலுள்ள ஏழைகளுடைய சுத்தத்தையும் கவனிப்போமானால் அவைகளை வரவொட்டாமல் தடுத்துவிட முடியும். அதைச் செய்யத் தவறினால் அந்தப் பாபத்துக்குரிய தண்டனையை அனுபவிக்க வேண்டியதுதான். தனவந்தர்கள் ஏழைகளை மறவாமலும், தங்கள் பணத்தை அவர்களுக்காக உபயோகித்தும், பிறரை ஏழையாக்கிப் பணம் தேடாதிருந்தும் வருவார்களானால் அவர்களிடம் பணமிருப்பதைக் குறித்து நான் வருந்தமாட்டேன்."

புது டில்லி,
11—6—46

பியாரிலால்

## தோட்டிகளின் வேலை நிறுத்தங்கள்

எந்த விதமாகக் கோரியும் பரிகாரம் கிடையாமல்போனால் அப்போது ஏழைத் தோட்டிகள் என்ன செய்ய வேண்டும் என்று, கொள்ளையடிக்கலாமா என்ற கேள்வியைக் கேட்ட நிருபரே கேட்கிறார்.

"அரைப்பட்டினி கிடந்துகொண்டும் அழுக்கிலும் ஆபாசத்திலும் வசித்துக் கொண்டும், சேவை செய்ய வேண்டும் என்று கூறுகிறீர்களா?" என்று அந்த நிருபர் கோபமாகக் கேட்கின்றார்.

அவருடைய கேள்வி நியாயமானதுதான். ஆயினும் அவர்கள் வேலை நிறுத்தம் செய்யாமல், 'இப்படிப் பட்டினியில் உழலவிடும் இந்தத் தோட்டித் தொழில் எங்களுக்கு வேண்டாம்' என்று ஜனங்களிடமும் நகரசபையாரிடமும் கூறிவிடுவதே முறையாகும். இப்படி வேலையை அறவே விட்டுவிடுவதற்கும் வேலையைத் தற்காலிகமாக நிறுத்திவைப்பதற்கும் எவ்வளவோ வித்தியாசமுண்டு. வேலை நிறுத்தமானது ஏதேனும் தற்காலிகப் பரிகாரத்தை எதிர்பார்த்தே செய்யப்படுகிறது. நான் கூறியபடி வேலையை அறவே விட்டுவிடுவதோ ஜனங்களுக்கு அறிவுறுத்துவதோடு தங்களுக்கு நல்வாழ்வு தேடுவதுமாகும். இந்தக் காரியம், பொது ஜனங்களுடைய மனச் சாட்சியை வேலை செய்யாதபடி செய்து வரும் தவறான எண்ணங்களை நீக்கி அதைத் தட்டி எழுப்பிவிடும். அப்போது தோட்டிகள் தோட்டி வேலையையும் ஒருநல்ல வித்தையாகச் செய்து வெகு நாட்களுக்கு முன்னதாக அடைந்திருக்க வேண்டிய உன்னத பதவியை அடையுமாறு செய்பவர்கள் ஆகிவிடுவார்கள்.

புது டில்லி,    மோ. க. காந்தி.
15—6—46

## மிருகபலி

ஒரு நிருபர் எழுதுகிறார் :—

மைசூரிலுள்ள ஹரிஜனங்கள் கோவில்களில் மிருகங்களை பலியிடுகிறார்கள். கிருஷ்ணராஜ நகர் தாலுகாவில் இந்த நோக்கத்துடன் ஜனங்கள் அடிக்கடி பல கோவில்களுக்குப் போய்வருகிறார்கள். இந்த வருஷம் ஒரு கோவிலில் ஜனவரி 3-ம் தேதியிலிருந்து 23-ம் தேதிவரை நாள்தோறும் மூன்று நான்கு வெள்ளாடுகள் பலியிடப் பெற்றன.

சிராவண மாதத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் பலியிடப்படும் இடமுமுண்டு. இந்தக் காரியத்தில் ஹரிஜனங்கள் மட்டுமின்றி இந்து மதத்தின் காவலர் என்று தங்களைத் தாங்களே கூறிவரும் புரோகிதர்களும் கூடக் கலந்து கொள்கிறார்கள். இந்தப் பலி விஷயத்தில் கலந்துகொள்பவர்கள் அந்தக் காலங்களில் மதுபானத்திலும் ஆழ்ந்து வருகிறார்கள்.

இதில் அதிகமான வேதனையைத் தருவது மாட்டு மாம்சம் உண்பதுதான். கடவுளுடைய இல்லமாகிய கோவிலின் முன்பாகவே இத்தகைய மிருகபலியைச் செய்வது, இந்து என்று சொல்லிக்கொள்ளும் ஒவ்வொருவரும் வெட்கப் படவேண்டிய காரியமாயிருக்கின்றது."

ஆம், இந்த நிருபர் கூறுவது உண்மையாயிருக்குமானால், அது ஒவ்வொரு இந்துவும் தலை குனிய வேண்டிய காரியம் தான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் வாயால் கண்டிப்பதைக் கொண்டு மட்டுமே எந்தப் பாபகாரியத்தையும் நிறுத்தி விடமுடியாது. சமூகம் தவறு செய்கிறது, என்செய்வேன் என்று தனிமனிதன் சும்மாயிருக்க முடியாது. அதைச் சீர்திருத்த வேண்டிய பொறுப்பு முதலில் நிருபரையும் இரண்டாவதாக பலி நடக்குமிடத்திலுள்ள ஜனங்களையும் அதற்கடுத்ததாக சமஸ்தானத்தின் அதிபதியையும் பிரஜைகளையும், அதற்கும் அடுத்ததாக கர்நாடகம், சென்னை மாகாணம் இந்தியாமுழுவதையும் பொறுத்ததாகும். ஒவ்வொருவரும் தம் தம் கடமையைச் சரிவர நிறைவேற்றினால் ஊழூழி காலமாக நடந்துவந்த வழக்கமாயிருந்தாலும் அது ஒழிந்தே போகும். சரியாகச் செய்தாலும் அஹிம்சையாகச் செய்யும் காரியம் தான் வெற்றிபெறும்.

ஆதலால் சீர்திருத்த வேலையை ஆரம்பிக்க வேண்டியவர் நிருபரே யாவார். சீர்திருத்த வேலை செய்ய வேண்டிய முறையைக் குறித்து இதற்கு முன்பே எழுதியுள்ளேன்.

புது டில்லி,    மோ. க. காந்தி.
15—6—46
[ஹரிஜன சேவக்கிலிருந்து]

## கொள்ளை யடித்தல்

ஒரு நிருபர் எழுதுகிறார் :—

"தான்யம் கடையில் கிடையாததால் ஜனங்கள் பட்டினி கிடந்து செத்துக் கொண்டிருக்கும்போது, சர்க்கார் கிடங்குகளிலேயோ தனிப்பட்டவர் கிடங்குகளிலேயோ தான்யங்களைக் கெட்டுப் போகும்படி பார்த்துக் கொண்டிருப்பார்களேயானால் பொதுஜன ஊழியர் செய்யவேண்டியது யாது? ஜனங்களைப் பாதுகாப்பதற்காக தார்ஸனா உப்பளத்தைக் கைப்பற்றச் செய்ததுபோல் செய்யலாமா? தாங்கள் கொள்ளை யடிப்பதையும் விரும்பவில்லை, வாயில்லாப் பூச்சிகளாக மடிவதையும் விரும்பவில்லை. அப்படியானால் வேறு எந்த முறையை அனுஷ்டிப்பது?"

கொள்ளையடிப்பது என்பது அதுவாக எந்தக் காலத்திலும் எவ்வித நன்மையும் செய்ய முடியாது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளலாம். எங்கேனும் அதனால் நன்மை உண்டாயிருப்பதாகச் சொன்னால், கவனியாதிருந்த தேவையைக் கவனிக்கும்படி செய்ததுதான் அந்த நன்மை. ஆனால் நான் கூறுகிறபடி உண்ணாவிரத மிருப்பதுதான் நிச்சயமாகப் பலன் தருவதாகும். அது தானாகவும் நன்மை செய்யும், கவனிக்கும்படி செய்தும் நன்மை செய்யும். தாமாக உண்ணாவிரதத்தை மேற்கொள்ளுபவர் பசியின் கஷ்டம் தெரியாத அளவு மனோதைரியமுடையவர்களாக ஆவார்கள். அத்துடன் அது ஜனங்களுடைய மனச் சாட்சியையும், சர்க்காருக்கு மனச்சாட்சி யுண்டானால் அவர்களுடைய மனச் சாட்சியையும் கிளறிவிடும்.

தார்சனாப் போரில் நாம் பல தவறுகள் செய்துவிட்ட போதிலும் அது ஒரு வீரம் நிறைந்த போராகவே இருந்தது. அதில் ஈடுபட்டவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட துன்பங்களைத் தைரியமாகப் பொறுத்துக் கொண்டார்கள். ஆனால் அதற்கும் கொள்ளையடிப்பதற்கும் வித்தியாச முண்டு என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். தார்சனா உப்பளம் ஜனங்களுடைய சொத்தாகவே கருதப்பட்டது. அதை பலாத்காரமாகக் கைப்பற்ற எண்ணவுமில்லை. இந்தியாவில் நிலத்திலோ நீரிலோ விளையும் உப்பெல்லாம் ஜனங்களுக்கே சொந்தம் என்னும் உரிமையை நிலைநாட்டுவதற்காகவே போர் செய்தோம். அந்தப் போர் வெற்றி பெற்று சர்க்கார் நம் கோரிக்கைக்கு இணங்கி யிருந்தால், அந்த வெற்றி அதில் ஈடுபட்டோர் அனுபவித்த துன்பங்களின் பயனாகவே கிடைத்ததாகும். தேச முழுவதும் ஜனங்கள் தாமாகவே வேண்டுமென்று துன்பங்களை ஏற்றுக்கொண்டதுதான் இர்வின்-காந்தி ஒப்பந்தம் உண்டாவதற்குக் காரணமா யிருந்தது. இப்பொழுது நிருபர் தார்சனாப் போருக்கும் தான்யக் கிடங்குகளைக் கொள்ளை யடிப்பதற்குமுள்ள வித்தியாசத்தை அறிந்து கொள்வார் என்று நம்புகிறேன். இரண்டுக்கும் எவ்விதமான ஒப்புவமையும் கிடையாது.

புது டில்லி,    மோ. க. காந்தி.
13—6—'46.

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை, வெளியீடு : ஆசிரியர், நாமக்கல் கவிஞர்.

ஜூன் 23 ஞாயிறு 1946


## ஐரோப்பியர் வாக்குரிமை

ஐரோப்பிய சங்கத்தின் தலைவராகிய பெரியவர் சிம்மத்தின் சீற்றத்தைக் காட்டிவிட்டார். அதுதான் ஐரோப்பியர் எண்ணத்தைப்பற்றிய உண்மை என்று தோன்றுகிறது. அரசியல் நிர்ணய சபையானது அதன் பெயருக்கேற்ற கௌரவத்துடன் அமைக்கப் படவேண்டுமானல் ஐரோப்பியர்கள் அதன் அங்கத்தினராவதற்காக அபேட்சகர்களாக நிற்கவுமாட்டார்கள், அப்படி நிற்பவர்களுக்கு வாக்கு அளிக்கவு மாட்டார்கள் என்பது நிச்சயமாகி விடவேண்டும். இந்தியாவில் நடைபெற்று வரும் பிரிட்டிஷ் ஆட்சியிடம் உத்யோகப் பற்றுள்ள இராணுவம், உத்யோகப் பற்றுள்ள ஸிவில், உத்யோகப் பற்றில்லாத இராணுவம், உத்யோகப்பற்றில்லாத ஸிவில் என்று நான்கு படைகள் உள. ஆதலால் அரசாங்கமானது ஐரோப்பியர்கள் தனக்கு அடங்கியவர்கள் அல்லர் என்று கூறுமானல் அது அர்த்தமற்ற பேச்சேயாகும். உத்யோகம் வகிப்பதெல்லாம் உத்யோகம் வகியாதவருடைய நலனுக்காகவே தான். உத்யோகம் வகியாதவர்கள் இல்லையானல் உத்தியோகம் வகிப்பவர்களுக்கு இங்கு வேலையே கிடையாது. பிரிட்டிஷ் வியாபாரத்தைக் காப்பாற்றுவதற்காகவே இங்கு பிரிட்டிஷ் கப்பற் படை வந்ததாகும். இந்தியா முழுவதும், படையெடுத்து ஜெயித்து ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் நாடேயன்றி வேறன்று. இந்த விஷயங்களை எல்லாம் மனத்தில் வைத்தேதான் ஐரோப்பிய சங்கத் தலைவருடைய பிரதாபங்களை ஆராய வேண்டும். அவர் அதிகார மமதையாகிய வெறியில் மூழ்கி யிருப்பதால் அரசியல் நிர்ணய சபையில் பிரதிநிதியாக இருக்கவோ அல்லது பிரதிநிதியாக இருக்க விரும்புவோர்க்கு வாக்களிக்கவோ தம்முடைய இனத்தார்க்குத் தூதுகோஷ்டியின் அறிக்கையானது சட்டப்படியான உரிமையை அளிக்கிறதா என்பதைக் கேட்டுத் தெரிந்து கொள்ளச் சிரமப்படவில்லை என்று தோன்றுகிறது. அவரும் அவருடைய இனத்தாரும் தெரிந்து கொள்வதற்காக டில்லி வக்கீல்களுள் முதன்மையானவருடைய அபிப்பிராயத்தைப் பெற்றிருக்கின்றேன்.. அது மற்றொரு பகுதியில் காணப்படும்.

ஐரோப்பிய சங்கத்தலைவர் தம்முடைய இனத்தாருக்குச் சட்டப்படியும் சன்மார்க்கப்படியும் கிடைத்துள்ள உரிமை யாது என்பதுபற்றித் தூதுகோஷ்டியாரிடம் கேட்கத் திருவுளம் கொள்ள வில்லையே ஏன்? தூதுகோஷ்டியாரும் வைஸிராயும் பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் பிரதிநிதிகளாக நின்று எந்த ஏகாதிபத்தியத்தை ஒழிக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்களோ அந்த ஏகாதிபத்தியத்தின் பிரதிநிதியாகத் தம்மை எண்ணிக்கொண்டு தூதுகோஷ்டியாரை வெறும் கிள்ளுக்கீரையாக மதித்து விட்டாரா?

எந்தப் பக்கமாகக் காற்று வீசுகிறது என்பதை இந்த வைக்கோற் துரும்பு சாய்வதைக் கொண்டு அறிந்து கொள்ளலாம்.

ஐரோப்பிய சங்கத்தின் இந்த முட்டாள்தனமான காரியம்தான் தூதுகோஷ்டியார் அந்தரங்க சுத்தியாகவே நடந்து வருகிறார்கள் என்ற நம்பிக்கையைக் குலைக்கும் விஷயங்களில் பிரதானமானது என்று எண்ணுகின்றேன். தூதுகோஷ்டியார் பக்குவமாகாத காலத்துக்கு முன்னதாகவே வந்து விட்டார்களா? அல்லது இந்தியாவில் பீரங்கியை நம்பி வாழும் ஐரோப்பியர் அந்த நம்பிக்கையைத் துறந்துவிட்டு ஆண்ட்ரூஸ் மாதிரி இந்திய மக்களுடைய நல்லெண்ணத்தை மட்டுமே நம்பி வாழ ஒருப்படுவார்களா? அல்லது இந்தியாவில் திணிக்கப்பட்டு இதுவரை நடந்துவரும் ஆட்சியே இன்னும் நடந்து வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்களா?

நாங்கள் முரண்டவில்லை என்று எப்படி அவர்கள் கூறமுடியும்? அவர்களுடைய அறிக்கை முழுவதிலும் அந்த நாற்றந்தானே நிறைந்திருக்கின்றது. வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறை கண்ணைக் குத்தும் அளவில் வகுக்கப் பட்டிருக்கின்றது. ஐரோப்பியர்கள் சட்ட சபைகளில் இருப்பதற்குக் கூட என்ன நியாயம் உண்டு? அவர்கள் சட்ட சபைகளில் இருந்தார்களே, அங்கிருந்து கொண்டு வங்காளத்திலும் அஸ்ஸாமிலும் வகுப்புகளைப் பிரித்துவைக்கும் புண்ணிய கைங்கரியத்தைத் தவிர வேறு என்ன நல்ல காரியம் சாதித்திருக்கிறார்கள்? இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகையை இவர்கள் தாமாக எங்களுக்கு வேண்டாம் என்று சொல்லியிருந்தால் அவர்களுக்கு எவ்வளவு கௌரவமாக இருந்திருக்கும். அதை விட்டுவிட்டு அவர்கள் வெள்ளைக்காரன்தான் இந்தியாவைத் தாங்கி வருவதாகக் கூறும் பழைய கொள்கையையே வரவேற்றிருக்கிறார்கள். இப்பொழுது சுதந்திர அருணோதய சமயத்திலும்கூட அவர்கள் இந்தியாவுக்கு அரசியல் அமைக்கும் விஷயத்தில் தாராள மனப்பான்மையுடன் உதவி செய்ய விரும்புகிறார்கள் !!!

நான் முரண்டவில்லை என்று தலைவர் கூறுகிறார், ஆனல் அவர் முரண்டவே செய்கிறார். ஒன்றும் பேசாமல் தம்முடைய பெருந்தன்மையைச் செயல் மூலம் காட்டுபவரே முரண்டாதவர் ஆவார்.

இப்பொழுது அவர்கள் கடைசியாக விடுத்த அறிக்கையானது அவர்களுக்கு முட்டாள் பட்டம் கட்டுவதாகவே இருக்கின்றது. அவர்கள் தாங்கள் பிரதிநிதியாக நிற்கமாட்டார்களாம், ஆனல் இந்தியத் தோலுள்ள தங்கள் அடிமைகளைப் பிரதிநிதியாகத் தேர்தல் செய்வதற்குத் தங்கள் வாக்கை உபயோகிப்பார்களாம். தாங்கள் அற்பத் தொகையினராயிருந்தாலும், இந்தியாவில் வாயில்லாப் பூச்சிகளாக உள்ள கோடிக்கணக்கான பாமர மக்களுடைய குரல்வளையை நெரிப்பதற்காக இதுவரை எந்தத் தந்திரத்தைக் கையாண்டார்களோ அதையே இப்போதும் இயலுமானல் கையாள விரும்புகிறார்கள். இந்த வேதனை இன்னும் எத்தனை நாளுக்கு? தூதுகோஷ்டியார் இந்தப் புனிதமற்ற துராசையைத் தாங்கி நிற்பதானல் அரசியல் நிர்ணய சபையாகிய தங்கள் சிறிய தோணியைக் எப்படி கடலில் மிதக்கவிட முடியும்? தூதுகோஷ்டியார் நிறைவேற்ற வேண்டிய இந்தத் தெளிவான கடமையை அவர்களுக்காக இந்தியர்கள் நிறைவேற்றி வைக்க முடியாது.

புது டில்லி, மோ. க. காந்தி.
17—6—46

## மாங்காய்ப் பருப்பு

'' இந்திய விவசாய மாஸிகை " என்னும் சஞ்சிகையின் 194: டிஸம்பர் வெளியீட்டில் ''மாங்காய்ப் பருப்பு உணவு" என்னும் தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரையின் நகல் ஒன்றை டாக்டர் கோபிசந்த் பர்க்காவா அனுப்பி யிருக்கிறார்.

அந்தக் கட்டுரை கூறுகிறது :—

மாங்காய்ப் பருப்பை உணவாக உபயோகிக்கும் வழக்கம் கஞ்சம் ஜில்லாவிலுள்ள கோண்ட் மலைப் பிரதேசவாசிகளிடம் சர்வ சாதாரணமாகக் காணப்

படுகிறது. அத்துடன் அது இந்தியாவின் வேறு பாகங்களிலும் காணப்படுகிறது. ஆயினும் அது எங்குமே காணப்படும் வழக்கமாகத் தோன்றவில்லை. ஒரு வேளை அந்த வழக்கத்தைக் கையாள்பவர்கள் ஆதியில் உணவுப் பஞ்சம் உண்டானதன் காரணமாக அதை உண்ண ஆரம்பித்திருக்கலாம். ஆயினும் இப்பொழுது ஆகாரம் ஏராளமாக உள்ளவர்களுங்கூட அது கிடைக்கும் பருவகாலத்தில் அதை வெகு ருசியாகச் சாப்பிடுகிறார்கள்."

இறுதியாக அந்தக் கட்டுரை கூறுவது :—பரம ஏழைகளாகவுள்ள கோண்ட் ஜாதியார் அதை வருஷந்தோறும் சில மாதங்களில் தங்கள் பிரதான உணவாகவே உண்ணுகின்றார்கள். எல்லோரும் அப்படிச் செய்ய வேண்டும் என்று சிபார்சு செய்ய முடியாது. ஆயினும் அரிசியைக் குறைத்துக்கொண்டு அதை உண்ணலாம் என்றே தோன்றுகிறது. மாங்காய்ப் பருப்பை உண்பதற்கு உயர்ந்த தினுசு மாம்பழங்கள் வேண்டுவதில்லை. எங்கும் காணப்படும் நாட்டு ஜாதி மாம்பழங்கள் போதும். கொட்டைகளைப் பத்திரப்படுத்தி உள்ளேயுள்ள பருப்பை எடுத்துத்தட்டி நீரில் பலமுறை ஊற வைத்துக் கழுவினால் அதிலுள்ள துவர்ப்பு நீங்கிவிடும்."

முஸோரி, பியாரிலால்
7—6—46

## தென் ஆப்பிரிக்க இந்தியர் சாத்வீக எதிர்ப்பு

காங்கிரஸ் காரியக் கமிட்டியில் 15—6—1946ல் நிறைவேறிய தீர்மானம் :—

தென் ஆப்பிரிக்கா யூனியன் சர்க்கார் அங்குள்ள இந்திய ஜனங்களுக்குச் சில தடைகள் ஏற்படுத்துவதற்காகச் சமீபத்தில் நிறைவேற்றிய சட்டத்தைக் கண்டிப்பதற்காகத் தென் ஆப்பிரிக்கா இந்திய மக்கள் சாத்வீகச் சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பித்திருப்பதைக் கண்டு காங்கிரஸ் காரியக் கமிட்டியார் கவலைகொண்ட போதிலும் திருப்தியடைகின்றார்கள்.

வாழ்க்கைச் சுகங்களைப் பெரிதாக எண்ணாமல் மானத்தையே பெரிதாக எண்ணுவதால் அந்த இயக்கம் நிச்சயமாக வெற்றி பெறும் என்றே காங்கிரஸ் காரியக் கமிட்டியார் கருதுகிறார்கள்.

போரை ஆரம்பித்து விட்டதால் அவர்கள் இடையில் பணிந்து விடாமல் இறுதிவரைப் போராடுவார்கள் என்றே காரியக் கமிட்டியார் எதிர்பார்க்கிறார்கள். கமிட்டியார் சட்டமறுப்புச் செய்வோர்க்குத் தங்கள் பரிபூரணமான அனுதாபத்தை அளிக்கிறார்கள். போரில் கலந்து கொள்ளாதவர்களை அந்தச் சட்டத்தில் காணப்படும் பசப்பு வார்த்தைகளிலும் யூனியன் சர்க்கார் தரக்கூடிய சில்லரைச் சலுகைகளிலும் மயங்கிவிடாதிருக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறார்கள். அந்தச் சட்டத்தை ரத்து செய்தாலன்றி அதனால் இந்தியர்க்கு உண்டாகும் அவமானத்தை நீக்க முடியாது. இந்திய சர்க்கார் பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இருப்பதால் வைஸிராயானவர், தைரியமாகச் சட்டத்தை எதிர்ப்பவர்களுக்காகப் பகிரங்கமாகத் தம்முடைய செல்வாக்கை உபயோகித்து மனித உரிமைகளுக்காக நடக்கும் இந்த கௌரவமான போராட்டத்திற்கு உலக மக்களின் அனுதாபத்தைப் பெற்றுத் தருவார் என்று கமிட்டியார் நம்புகிறார்கள்.

## இரண்டு வித உபயோகத்துக்கான கால் நடைகள்

**ஸர் தத்தார் ஸிங், அகில இந்திய கால்நடை உபயோக சர்க்கார் ஆலோசகர்**

இரண்டு வித உபயோகம் என்பதன் பொருள் ஒரே இனத்தைச் சேர்ந்த கால் நடைகளில் சில ஒரு வித உபயோகத்துக்கும் வேறு சில வேறு ஒரு வித உபயோகத்துக்கும், பயன்படுவன என்பதேயாகும். இந்தியாவில் எந்த யினத்தில் ஆண் பாரம் இழுக்கவும் பெண் பால் கறக்கவும் உபயோகமாகின்றனவோ அவை "இரண்டு வித உபயோகக் கால் நடைகள்" ஆகும்.

இந்தியாவில் இந்த இரட்டை உபயோகக் கால் நடைகளை அபிவிர்த்தி செய்ய முயற்சிப்பது நல்லதா என்பதைப் பற்றிக் கால் நடைகளை அபிவிர்த்தி செய்வோரிடையே அதிகமாகத் தர்க்கங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. கால்நடைகளை வளர்ப்பவர்களும் அவற்றின் க்ஷேமத்தைக் கருதுபவர்களும் இந்தப் பிரச்னையை ஆழ்ந்து கவனித்து வருகிறார்கள். ஆனால் 1928-ல் வெளியான விவசாயக் கமிஷனுடைய அறிக்கைதான் எல்லோரையும் இதைக் கவனிக்கும்படியாகச் செய்தது. அது முதல் இது சம்பந்தமாக இரண்டு விதமான அபிப்பிராயங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆதலால் இது முழுவதையும் சரியானபடி ஆராய்வதற்கு அனுசரணையாக இரண்டு கட்சியாருடைய வாதங்களையும் சுருக்கமாகக் கூறுதல் உபயோகமாயிருக்கும் என்று நம்புகிறேன்.

இந்தியாவில் கால் நடைகளை இரண்டு விதமான உபயோகங்களுக்காக அபிவிர்த்தி செய்யாமல் குறிப்பிட்ட ஒருவித உபயோகத்துக்காகவே அபிவிர்த்தி செய்ய வேண்டும் என்று கூறுவோருடைய வாதம் வருமாறு :—

(1) இந்தியாவில் கால் நடைகள் ஆதி காலந்தொட்டு குறிப்பிட்ட உபயோகத்துக்காகவே அபிவிர்த்தி செய்யப்பட்டு வந்திருக்கின்றன. பொதுவாகப் பார்த்தால் அதிக வேலை செய்யக் கூடியதும் அதிக விரைவாக ஓடக்கூடியதுமான கால்நடைகள் அதிகமாகப் பால் கறக்கக் கூடியவை அல்ல. அதிகப் பால் கறக்கக் கூடியவை அதிக வேகமாகப் போகா. ஆகவே பால் கறப்பதும் பாரம் இழுப்பதும் ஒன்று சேர்ந்து காணப்படுவதில்லை.

(2) இரட்டை விதமான கால் நடைகள் வேண்டுமானால் ஒரு விதத்தில் அதிகமாக அபிவிர்த்தி அடையும்போது அடுத்த விதத்திலும் அபிவிர்த்தியடையும் பொருட்டு அதை அடிக்கடி தடுத்துவிட வேண்டியிருக்கிறது. அதனால் பாரம் இழுப்பதும் பால்கறப்பதும் குறைந்த அளவிலேயே இருந்து விடுகின்றன. அதனால் இரட்டை உபயோகக் கால் நடைகளை அபிவிர்த்தி செய்தால் அவைகள் உயர்ந்த தரமான கால்நடைகளாக யில்லாமலும் இரண்டு விதமாகவும் தாழ்ந்த நிலையிலும் இருந்து விடுகின்றன. ஆதலால் நல்ல ரகக் கால்நடைகளை உண்டாக்க வேண்டுமானால் குறிப்பிட்ட உபயோகத்துக்காக மட்டும் அபிவிர்த்தி செய்யும் பழக்கமே நல்லது.

(3) குறிப்பிட்ட ஒருவித உபயோகத்துக்காக மட்டுமே அபிவிர்த்தி செய்வதாயிருந்தால் மட்டுமே அந்த வித உபயோகத்துக்கான உயர்ந்த ரகக் கால்நடைகளைச் சீக்கிரம் சீக்கிரமாக உண்டாக்கிவிட முடியும். அத்துடன் இரண்டுவித உபயோகங்களும் ஒன்றுக் கொன்று முரண்படாதிருந்த போதிலுங் கூட இரண்டுவித அம்சங்களும் ஏக காலத்தில் உண்டாகும்படி செய்வதைவிட ஒருவித அம்சம் உண்டாகும்படி செய்வதே அதிக நிச்சயமாகவும் விரைவாகவும் பயன் தருவதாகும். ஒரு அம்சத்திலேயே கண்ணுங்கருத்துமாயிருந்தாலொழிய உயர்ந்த ரகம் ஒருநாளும் சித்தியாது.

(4) இந்தியாவில் பாரம் இழுப்பதற்குக் காளையே பிரதானமான தேவையாகும். பாரம் இழுக்கும் கால்நடை இனத்திலிருந்து அதிகமாகப் பால் கறக்கும் கால்நடைகளை உண்டாக்க முயன்றால் பாரம் இழுக்கும் அம்சம் குறைந்து போகும்.

(5) இரட்டை உபயோகக் கால் நடைகளை அபிவிர்த்தி செய்யும் தேசங்கள், ஒற்றை உபயோகத்துக்காக அபிவிர்த்தி செய்யும் தேசங்களுடன் போட்டி போட முடியாது. ஆதலால் குறிப்பிட்ட அம்சத்தை அபிவிர்த்தி செய்வதற்கு இடையூறான காரியங்களை எல்லாம் நிறுத்திவிட வேண்டும்.

இரட்டைவித உபயோகத்துக்காகவே அபிவிர்த்தி செய்ய வேண்டும் என்று கூறுவோருடைய வாதம் இது :—

(1) இப்பொழுதே இந்தியாவில் கால்நடைகள் ஏராளமாகி விட்டன. குறிப்பிட்ட அம்சத்துக்காக அபிவிர்த்தி செய்வதாயிருந்தால் அவை இன்னும் அதிகமாகப் பெருகிவிடும். அப்பொழுது விவசாயி பாரமிழுக்கும் கால்நடைகளைத் தருவதற்காக ஒரு மிருகமும் பால்கறக்கும் கால்நடைகளைத் தருவதற்காக வேறொரு மிருகமும் வைத்திருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே அவரால் எத்தனை கால்நடைகளைக் காப்பாற்ற முடியுமோ அவற்றிற்கு அதிகமாக வைத்துக் கஷ்டப்பட வேண்டிய நிலைமை உண்டாகின்றது.

(2) இந்திய விவசாயி அதிக வறுமை யுடையவராக இருப்பதால் அதிகமான கால்நடைகளை வைத்துக் காப்பாற்ற முடியாது. அவருக்குத் தேவையானது யாதெனில் தம்முடைய விவசாயத்துக்குப் பயன்படக்கூடிய நல்ல பலமுள்ள காளைகளை ஈனுவதோடு தம்முடைய குடும்பத்துக்கு வேண்டிய பாலைத் தரக்கூடியதாகவுமுள்ள பசு தினுசேயாகும். ஆகவே ஒரு மிருகமே இரண்டுவித உபயோகத்துக்கும் பயன்படுவதாயிருக்க வேண்டும்.

(3) சாதாரணமாகப் பார்த்தால், பிறக்கும் கன்றுகளில் செம்பாதி ஆணாகவே இருக்கும். அவைகளில் சிலவே பொலிக்காளைகளாகப் பயன்படுத்தக் கூடியனவாக இருக்கும். வேறு வேறு உபயோகத்துக்கு வேறு வேறு தினுசு மாடுகளை உபயோகித்தால் பால் தரும் தினுசுகளில் ஆண் கன்றுகள் இப்பொழுது பயன்படுவது போல பயன் படாமற் போகும். இரட்டைவிதக் கால்நடைகளாயிருந்தால் ஆண்கள் எல்லாவற்றையுமே பாரம் இழுக்க உபயோகப்படுத்தலாம். ஆதலால் பாரம் இழுக்கவும், பால் கறக்கவும் அவசியமாயுள்ள இந்தியாவில் சாதாரணமான விவசாயிக்கு இரட்டைவிதக் கால்நடைகளே ஒற்றைவிதக் கால்நடைகளை விட அதிகக் குறைந்த செலவில் ஜீவனத்தை நடத்துவதற்குப் பயன் படுவனவாகும்.

இந்த இரண்டு கட்சியின் வாதங்களையும் மேலெழுந்த வாரியாகப் பார்த்தால்கூட தர்க்கத்துக்கிடமான மற்ற விஷயங்களில் போலவே அதிலும் இரண்டு கட்சியார் கூறுவதிலும் அதிகமான உண்மை காணப்படுவதைக் கண்டு கொள்ளலாம். இந்த இரண்டு கட்சி வாதங்களும் ஒரே படத்தை வேறு வேறாக இரண்டு இடங்களிலிருந்து நோக்குவது போன்றவைகளே யாகும். எந்தத் தேசத்திலாயினும் கால்நடை செழிப்பாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டுமானால் இரட்டை விதக் கால்நடைகளையும் ஒற்றை விதக் கால்நடைகளையும் சேர்ந்தாற்போல் அபிவிருத்தி செய்வதே முறை என்று நான் கருதுகின்றேன்.

பிரிட்டிஷ் தேசத்தில் கைத்தொழிலே பிரதானமானது. அப்படி யிருந்தும்கூட அந்தத் தேசத்தில் புகழ்பெற்ற சில விசேஷமான மாடுகள் இருப்பது போலவே இரட்டைவித மாடுகளும் இருந்துவருகின்றன. எல்லாவிதமான கால்நடைகளும் செழித்துப் பெருகி வருகின்றன. சில குறிப்பிட்ட உபயோகங்களுக்காகச் சில சிறந்த வர்க்கங்களை வைத்திருக்கிறார்கள். ஆயினும் அதிகமான வர்க்கங்கள் இரட்டைவித வர்க்கங்களாகவே இருக்கின்றன,

இந்தியாவில் பால் கறக்கும் குணத்தையும் பாரம் இழுக்கும் குணத்தையும் ஒன்று சேர்ப்பதில் எவ்வித கஷ்டமும் கிடையாது. இந்த இரண்டு வர்க்கங்களும் கொழுப்பு வையாமலே தானிருக்கின்றன. தீனியை உண்டு பால் தந்தோ வேலை செய்தோ உதவுகின்றன.

"மிகச் சிறந்த கறவை மாட்டு வர்க்கம்தான் உயர்ந்த ரக பாரமாட்டு வர்க்கத்தை உண்டாக்க முடியும். பால் உண்டாக்கும் சக்தியின் அளவேதான் கன்றுகள் ஈனக்கூடிய சக்தியுமாகும். பசுவின் சக்தியும், பண்பும் உள்ள அளவேதான் கன்றுகளின் ஆரோக்கியமும் ஆற்றலும் உள்ளதாகும்." என்று திரு. வில்லியம் ஸ்மித் கூறுகிறார்.

ஆனால் அவர் யோசனையை ஜாக்கிரதையாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும். என்னுடைய அனுபவம் யாதெனில், பாரமிழுக்கும் வர்க்கங்களிடத்திலும் பாரமிழுக்கும் பண்புக்குக் குந்தகமின்றியே பால் தரும் பண்பையும் உண்டாக்கிவிடலாம் என்பதேயாகும். ஆயினும், உள்ள பண்புக்கு ஊறு செயயாமல் வேறு பண்பு உண்டாக்குவதற்கும் எல்லையுண்டு என்பதை மறந்துவிடலாகாது. அதனால்தான் ராயல் விவசாய கமிஷன் "பார மிழுக்கும் வர்க்கங்களுக்கு இருக்கவேண்டிய இன்றியமையாத பண்புகள் கெட்டுப்போகாத அளவேதான் பால் கறக்கும் பண்புகளை உண்டாக்கவேண்டும்" என்று கூறுகிறார்கள். இப்பொழுதுள்ள வர்க்கங்களில் எந்தப் பண்புக்கு எது தகுந்ததோ அதைப் பொறுக்கி எடுத்துக் கொண்டால் இந்தக் காரியம் எளிதில் நடைபெறும்.

இந்தியாவில் ஹிஸ்ஸார், அம்லித் மகால், காங்கயம், நாகோர், பாக்நேரி போன்றவை சிறந்த பாரமிழுக்கும் வர்க்கங்கள் ; ஸாஹிவால், சிவப்பு சிந்தி போன்றவை சிறந்த பால் கறக்கும் வர்க்கங்கள். இந்தப் பால் கறக்கும் வர்க்கங்களைக் கொண்டு அபிவிர்த்தி செய்து பார்த்ததில், வெகு சீக்கிரத்திலேயே நல்ல நாட்டுப்பால்மாடுகளைப் கொண்டே உலகத்தில் மற்ற நாடுகளிலுள்ள சிறந்த பால் மாடுகளைப் போன்ற பால் கறக்கும் வர்க்கங்களை உற்பத்தி செய்துவிட முடியும் என்று தெளிவாகத் தெரிகின்றது. பூஸா, பெரோஜ்பூர், ஸாஹிவால் வர்க்கங்களைக் கொண்டு பெற்றுள்ள வெற்றிகள் எல்லோரும் அறிந்தனவே. அதனால் அவைகளைப்பற்றி விவரிக்க விரும்பவில்லை.

இனி, ஹரியாகு, தார்பார்க்கம், கீர் போன்ற இரட்டைவித வர்க்கங்களும் உள. ஹாரியானா வர்க்கத்தைக் கொண்டு அபிவிர்த்தி செய்து பார்த்ததில் அது பாரமிழுக்கும் வர்க்கமாயினும் பால் கறக்கும் பண்பும் அதிகமாக உடையது என்பது புலனாகின்றது. கீர் பசுக்கள் அதிகமாகப் பால் கறப்பவைகளாக இருப்பதோடு அவைகளின் காளைக்கன்றுகள் நல்ல பலமுடையவைகளாகவும் இருக்கின்றன. கீர் காளைகளிடம் ஹரியானாக் காளைகளுடைய சுறுசுறுப்பு இல்லாமல் இருக்கலாம். ஆயினும் இரண்டிலும் விவசாயிகளுக்கு வேண்டிய பண்புகள் சேர்ந்திருக்கின்றன. அத்தகைய கால்நடைகள் எங்கே செழித்து வளருமோ அங்கே வளர்த்தால் நல்ல லாபகாமுடையனவாக இருக்கும். ஆகவே கால்நடைகளை அபிவிர்த்தி செய்யும் இதர தேசங்களில் போலவே இந்த நாட்டிலும் ஒற்றைவித வர்க்கங்களையும் அபிவிர்த்தி செய்ய முடியும் என்பது என்னுடைய அபிப்பிராயம். விசேஷமான பண்புகள் வேண்டிய வர்க்கங்களை அபிவிர்த்தி செய்வதற்கு வேண்டிய மேய்ச்சல் வசதியும் தீனி வசதியும் உள்ள இடங்களில் அபிவிர்த்தி செய்யலாம். அத்தகைய வசதிகள் செய்ய முடியாத ஏழை விவசாயிகள் இரட்டைவித வர்க்கங்களை அபிவிருத்தி செய்வதுதான் நல்லது.

இந்தியாவிலுள்ள கால் நடைகளில் பெரும்பாலானவை பாலும் அதிகமாகக் கறப்பதில்லை, பாரமும் அதிகமாக இழுப்பதில்லை. இதைக் கொண்டு இவைகளை இரட்டைவித வர்க்கங்களாக எண்ணிவிடலாகாது. இரட்டைவித வர்க்கங்கள் என்பன வேறு; இரண்டுமில்லாத வர்க்கங்கள் என்பன வேறு. இந்த வர்க்கங்களை விசேஷமாகக் கவனித்து நல்ல பொலிக்காளைகளைக் கொண்டு அபிவிர்த்தி செய்ய வேண்டும்.

## பொய் சொல்வது என்றேனும் நியாய மாகுமா?

கேள்வி: பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னும் அறிஞர் கூறுகிறார்:—

"நான் ஒரு நாள் உலாவச் சென்றபோது ஓடி இளைத்துக் கொண்டிருந்த ஒரு நரியைக் கண்டேன். ஓடச் சக்தி யில்லாதிருந்தும் ஓடுவதற்கே எத்தனித்துக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரம் சென்றதும் சில வேடர்கள் வந்து நரியைக் கண்டீர்களா என்று என்னிடம் கேட்டார்கள். ஆம் என்று சொன்னேன். எந்த வழியாகப் போயிற்று என்று கேட்ட போது பொய்யே பகர்ந்தேன். உண்மையைச் சொல்லி யிருந்தால்தான் ஒழுக்கமாக நடந்து கொண்டவன் ஆவேன் என்று எனக்குத் தோன்றவில்லை."

இது பற்றித் தங்கள் கருத்து யாது?

பதில்: பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் என்னை விடப் பெரிய எழுத்தாளரும் தத்துவ சாஸ்திரியுமாவார். அதற்காக அவருக்கு மரியாதை செலுத்திய போதிலும் நான் அவருடைய அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கின்றேன். அவர் நரியைப் பார்த்ததாகக் கூறியதே தவறு. முதற் கேள்விக்குப் பதில் கூறவேண்டிய கடமை அவருக்குக் கிடையாது. வேடர்களை வேறு வழியாகத் திருப்பி விடும் எண்ணம் இருந்தாலொழிய அவர் இரண்டாவது கேள்விக்குக் கூடப் பதில் கூற மறுத்திருக்கலாம். யாருமே எந்தக் காலத்திலும் தம்மிடம் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்லித் தீரவேண்டும் என்ற கட்டாயம் கிடையாது. ஆனால் உள்ளதை உரைப்பது என்று ஆரம்பித்து விட்டால் அப்புறம் அதற்கு எவ்வித விலக்கும் ஏற்படுத்திக் கொள்ள முடியாது.

முசோரி,  மோ. க. காந்தி
31—5—46

## ரிக்ஷா இழுப்போர்

காந்தியடிகள் சிம்லாவில் தங்கியிருந்த பொழுதும் முஸோரியில் தங்கியிருந்த பொழுதும் ரிக்ஷா இழுப்போரைப் பற்றியும் பாரம் சுமப்போரைப் பற்றியும் கூட்டங்களில் பேசினார்:—

"எல்லோரும் அவர்களுடைய க்ஷேமத்தில் அக்கறை கொள்ள வேண்டியது அவசியமாகும். அவர்கள் பணக்காரர்களைச் சுகமாக வாழும்படி செய்கிறார்கள். ஆனால் பணக்காரர்களோ மனித இயல்புக்கு விரோதமான சேவையை அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்களே யன்றி அவர்கள் என்ன சம்பாதிக்கிறார்கள், என்ன சாப்பிடுகிறார்கள், எவ்விதமான இடத்தில் வசிக்கிறார்கள் என்பவற்றைப் பற்றிச் சிறிது கூடச் சிந்திப்பதில்லை. அவர்கள் காற்றும் வெளிச்சமுமில்லாத சின்னஞ் சிறிய குடில்களில் எட்டுப் பத்துப் பேராகச் சேர்ந்து வாழ்வதாக அறிகின்றேன். அவர்களுடைய உடை அழுக்கு ஏறியிருக்கின்றது, ஆனால் சுத்தமான உடைக்கு எங்கே போவார்கள்? பீகாருக்குச் சென்றிருந்த பொழுது அழுக்குச் சீலை கட்டியிருந்த பெண்களிடம் அழுக்குத் தேய்த்து ஸ்நானம் செய்யும்படிக்கும் சீலைகளைத் துவைக்கும் படிக்கும் கூறியபொழுது அவர்கள் "அப்படிச் செய்ய வேண்டியதுதான், அதற்கு மாற்றுச் சீலை வேண்டாமோ" என்று கேட்டார்கள். கடவுள் அருளை அதிகமாகப் பெற்றவர்கள் தங்கள் தேவைக்குப் போக அதிகமாக உள்ளதை ஏழைகளுக்காக உபயோகிப்பதே முறை. காங்கிரஸ் மந்திரி சபைகள் கவனித்துக்கொள்ளும் என்று கூறுகிறார்கள். அவர்கள் அப்படிச் செய்தால் நல்லதுதான். ஆனால் அது அவர்கள் செய்ய வேண்டிய கடமையேயன்றி வேறு யாது? அதனால் ரிக்ஷாவில் ஏறிச் செல்பவர்க்கு எவ்விதக் கடமையும் கிடையாது என்று எண்ணி விடவேண்டாம். இந்த ஏழைமக்கள் நான்கு வருஷகாலம் இழுத்ததும் இருதய நோயும் சுவாசப்பை நோயும் பெற்று இறந்து விடுவதாக டாக்டர்கள் கூறுகிறார்கள். அப்படியிருக்க ரிக்ஷாவில் ஏறுகிறவர்கள் அவர்களுக்குப் போதுமான உணவும் உடையும் உறையுளும் கிடைக்கும்படி செய்வதற்கும் அளவுக்கு மிஞ்சி வேலை செய்வதை நிறுத்துவதற்கும் வேண்டிய இரக்கம் இல்லாமலிருப்பது ஏன்?"

முஸோரி,  பியாரிலால்
11—6—46

## ஐரோப்பியர் வாக்குரிமை பற்றி சட்ட நிபுணர் கருத்து

ஐரோப்பியர்கள் இந்தியாவுக்கு அரசியல் அமைப்பு வகுக்கும் காரியத்தில் கலந்துகொள்ளத் தங்களுக்கும் உரிமை உண்டு என்று கூறும் வாதம் சம்பந்தமாகக் காந்தியடிகள் பெடரல் கோர்ட் ஸீனியர் வக்கீல் ஸ்ரீ சிவநாராயண் பி.ஏ. எல். எல். பி. என்னும் சட்டநிபுணருடைய அபிப்பிராயத்தைப் பெற்றிருக்கின்றார். அந்த நிபுணர் கூறுகிறார்:—

"என்னிடம் கேட்கப்பட்டிருக்கும் கேள்வி:— தூது கோஷ்டியார் கூறும் அரசியல் நிர்ணய சபைக்கு அன்னிய நாட்டாராகவுள்ள ஐரோப்பியர்களுக்குப் பிரதிநிதிகள் ஆகவும் பிரதிநிதிகளை அனுப்பவும் உரிமை உண்டா?

என்னுடைய பதில்: (1) அறிக்கையின் மூன்றாவது பாரா "இந்தியர்கள் இந்தியாவின் அரசியலை நிர்ணயிப்பதற்காகச் சீக்கிரமாக ஏற்பாடுகள் செய்ய வேண்டும்" என்று கூறுவதால் அரசியல் நிர்ணய சபையில் இந்தியர்கள் மட்டுமே பிரதிநிதிகளாயிருக்க வேண்டும்.

(2) 16வது பாரா—"இந்தியர்கள் இந்தியர்களுக்கான அரசியலை வகுப்பதற்கான ஏற்பாடு செய்வதே நோக்கம்" என்று கூறுகிறது.

(3) 18வது பாரா—"புதிய அரசியல் அமைப்பைத் தீர்மானிப்பதற்கு இப்பொழுது அமைந்துள்ள மாகாணச் சட்ட சபைகளை உபயோகித்துக் கொள்ள வேண்டும்" என்று கூறுகிறது.

4. பொது, முஸ்லிம், சீக்கியர் என்று மூன்று முக்கிய இனத்தாரே பிரதிநிதிகள் ஆகவும் பிரதிநிதிகளை தெரிந்தெடுக்கவுங் கூடியவர்கள் என்பதையும் 18வது பாரா கூறுகிறது. மற்ற இனத்தாருடைய விஷயம் 20வது பாராவில் கூறப்பட்டிருக்கிறது.

(5) 19வது பாராவில் மேற்கண்ட இனத்தார் எத்தனை பேரைத் தேர்தல் செய்வது என்ற விபரங்கள் காணப்படுகின்றன.

இந்திய நாட்டைச் சேராதவர்களும் அன்னிய நாட்டார்களும் இந்தத் தேர்தலில் கலந்துகொள்ளலாமா என்பதே இப்பொழுது தீர்மானிக்கவேண்டிய விஷயம்.

18-19வது பாராக்களில் சொல்லியுள்ள விஷயங்கள் 3-16 பாராக்களில் சொல்லப்பட்ட முறைக்கு ஒத்ததாகவே நடைபெற வேண்டும் என்று எண்ணுகின்றேன். ஆதலால் அரசியலை நிர்ணயிக்கும் உரிமை இந்தியர்களுக்கு மட்டுந்தான் உண்டு. இந்தியர்கள் அல்லாதார்க்குக் கிடையாது.

## காங்கிரஸ் சாதித்திருப்பது யாது?

குஜராத்திலிருந்து ஒரு ஹரிஜனர் எழுதுகிறார்:—

“இந்தியாவில் இப்பொழுது காங்கிரஸ் முஸ்லிம் லீக் என்று இரண்டு கட்சிகள்தான் உண்டு என்பதைத் தேர்தல்கள் தெளிவாக்கிவிட்டன. அத்துடன் ஹரிஜனங்கள் காங்கிரசுடனேயே இருந்து வருகிறார்கள் என்பதையும் காட்டி விட்டது. அம்பேத்காரை ஆதரிப்பவர்கள் வெகு சில ஸ்தானங்களே பெற்றிருக்கிறார்கள். காங்கிரஸை ஆதரிக்கும் ஹரிஜனங்கள் காங்கிரஸில் வகிக்கும் ஸ்தானம் யாது? ஏன் காங்கிரஸ் கமிட்டிகளுக்கெல்லாம் ஹரிஜனங்களை அபேட்சகர்களாக நிறுத்தி வைக்கவில்லை? அவர்களாக நின்றாலும் அவர்களை எதிர்க்கும்படி ஏன் சவர்ணர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்? சவர்ணர்கள்தாம் அதிகத் திறமையுடையவர்கள் என்று சாக்குச் சொல்லிக் கொண்டு ஹரிஜனங்களை இப்படிப் புறக்கணிப்பது சரியா? காங்கிரஸ் ஹரிஜனங்களுக்காக வெகு காலமாக உழைத்து வந்த போதிலும் இன்னும் அது அவர்களுக்குப் போதுமான கல்வி கொடுத்துத் திறமை உண்டாக்காமலிருப்பது ஏன்?”

இந்தக் கடிதத்தில் அறியாமையும் குத்தலும் ஒருங்கே காணப்படுகின்றன. ஆனால் அவைகள் மன்னிக்கத் தகுந்தனவே யாகும். நாம் அதன் தாத்பரியத்தையே அறிந்து கொள்ள வேண்டும். காங்கிரஸ் இத்தனை அதிகமாக ஹரிஜன ஸ்தானங்களைத் தேர்தலில் பெற்று விட்டதுவே, ஹரிஜனங்களுடைய நம்பிக்கையைப் பெறுமளவு அது அவர்களுக்குச் சேவை செய்திருக்க வேண்டும் என்று காட்டுகின்றதல்லவா? ஹரிஜனங்கள் இந்து சமயத்திலும் இந்து சமூகத்திலும் இணைபிரிக்க முடியாத பகுதியினர் ஆவர். இந்தப் பகுதி பிரிந்து போகுமானால் இந்து சமயமும் சமூகமும் அழிந்து போகவே செய்யும். சவர்ணர்கள் ஹரிஜனங்களுக்குச் செய்ய வேண்டிய அளவு சேவையைச் செய்யவில்லை என்பதே நிருபருடைய வாதம். சவர்ணர்கள் தாங்களாகவே தோட்டிகள் ஆய்விடுவார்களானால், அந்த நிமிஷமே சவர்ணர், ஹரிஜன் என்ற வித்தியாசம் தானாகவே மறைந்து போய்விடும். ஹரிஜனங்களிடையிலும் பல ஜாதிப் பிரிவுகள் உள. அவைகளும் ஒழிந்து போக வேண்டும். சகலரும் ஒரே ஜாதியாகவே அதாவது தோட்டி என்னும் ஜாதியாகவே ஆய்விட வேண்டும். தோட்டி என்பவன் ஹிந்துக்களுக்கு மட்டுமின்றி மனித ஜாதி முழுவதுக்குமான சேவகனே ஆவான். நாம் இத்தகைய தோட்டிகளாக ஆய்விட்டால் சகல வகுப்புக்களும் மறைந்து போய்விடும். எல்லோரும் ஊழியரா யிருக்குமிடத்தில் எஜமானரா யிருக்கக் கூடியவர் யார்?

ஆனால் இன்று இதெல்லாம் வெறுங் கனவுதான், வெறும் லட்சியம்தான். ஆயினும் கனவும் லட்சியமும் இல்லாமல் எந்த சமூகம் வாழ முடியும்? நாம் செய்யும் வேலை உறுதியானதாக இருக்க வேண்டும். காங்கிரஸ் ஜாதி மத பேதம் பாராட்டுவதில்லை. அது கீழே யுள்ளவர்களை மேலே தூக்கிவிட வேண்டும். மேலே பறப்பவர்கள் கீழே இறங்கி வரவேண்டும். அப்பொழுதுதான் சரியான சமரஸ மார்க்கம் காண முடியும். ஜனங்கள் குழியிலும் கிடக்க முடியாது, வானத்திலும் பறக்க முடியாது. பூமியின்மீதுதான் இருக்க முடியும். சமத்துவம் உண்டாக்குவது என்பதே காங்கிரஸின் வாக்குறுதி. அதை இன்னும் அது நிறைவேற்றவில்லை. அதை நிறைவேற்றாத வரை ஹரிஜனங்கள் குறைகூறிக் கொண்டுதான் இருப்பார்கள்.

நான் நிருபரிடம் கேட்க விரும்புவது இது. அழகாகக் கடிதம் எழுதியிருக்கிறாரே இந்த நிலைமை யாரால் அவருக்குக் கிடைத்தது? எந்த ஸ்தாபனம் ஹரிஜனங்களுக்குக் காங்கிரஸைவிட அதிகமாகச் சேவை செய்திருக்கின்றது? காங்கிரஸ் செய்ய வேண்டிய அளவு செய்யவில்லை என்பது உண்மைதான். இன்னும் செய்ய வேண்டுவது எவ்வளவோ இருக்கத்தான் செய்கின்றது. ஆயினும் காங்கிரஸ் செய்துள்ள அளவு வேறு யாரும் செய்யவில்லை என்பதும் உண்மையல்லவா? ஆதலால் ஹரிஜனங்கள் பொறுமையுடன் இருக்க வேண்டும். பொறுமைக்கும் எல்லையுண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அந்த எல்லைக்கு இன்னும் வந்துவிடவில்லை.

புது டில்லி மோ. க. காந்தி
15—6—46

[ஹரிஜன பந்துவிலிருந்து]

## மயக்கம்

நாம் பலவிதமான மூடக் கொள்கைகளாலும் மயக்கங்களாலும் பைத்தியங்களாலும் பீடிக்கப்பட்டிருக்கின்றோம். அவைகள் அனைத்தும் மனத்தின் சிருஷ்டிகளேயாகும். அவைகளை விரட்டும் வரை அவைகள் நம்மைத் துன்பப் படுத்திக்கொண்டுதானிருக்கும். நாம் ஒரு கயிற்றைப் பாம்பு என்று எண்ணி அதை அடிக்க ஓங்கி நம் கையை சுளுக்காக்கிக்கொள்கின்றோம். அதே போல் விஷமில்லாத பாம்பை விஷமுள்ள பாம்பாகக் கருதி அதை அடித்து நமக்கு நன்மை செய்யக்கூடிய ஒரு நண்பனை நம்முடைய முட்டாள்தனத்தின் காரணமாக இழந்து விடுகின்றோம். நல்ல மனிதன் ஒருவனைத் திருடன் என்று தவறாக எண்ணி அந்த பயத்தின் காரணமாக அவனைக் கொன்று விடுகின்றார்கள் அல்லவா? அநேக கிராமங்களில் ப்ளேக் நோய் வந்தால் அதற்குக் காரணம் ஹரிஜனங்கள்தான் என்று எண்ணி அவர்களைத் துன்புறுத்துவதையும் கேள்வியுறுகின்றோமல்லவா? அதே போல் கல்வி கற்றவர்களும் மாணவர்களும் ஹரிஜனங்களை மாணவர் விடுதிகளுக்குள் வரவொட்டாமல் தடுப்பதையும் நான் மூடக் கொள்கையின் காரணமாக நடக்கும் காரியமாகவே கருதுகின்றேன். திரு. பரிக்ஷித்லால் முஜும்தாரும் திரு. ஹேமந்த குமார் நீலகண்டரும் கையெழுத்திட்டு வெளியிட்டிருக்கும் துண்டுப் பிரசுரத்தை மாணவர்களும் மாணவர் விடுதி அதிகாரிகளும் கவனித்து வேண்டுவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன். குறிப்பிட்ட சில ஜாதியார்க்கென்று ஏற்பட்டுள்ள விடுதிகளில் சேர்க்க அநுமதியாவிட்டால் பாதகமில்லை என்பதாக அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அத்தகைய விடுதிகளிலும் ஹரிஜனங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய அபிப்பிராயம். அந்த ஜாதியார்கள் தங்களுடைய மனத்திலிருந்து தீண்டாமையை அகற்றிவிட்டதற்கு ஆநந்தப்படுவதைக் காட்டுவதற்காகவாவது அப்படிச் சேர்த்துக் கொள்ளுதல் அவசியமாகும்.

புது டில்லி, மோ. க. காந்தி.
15—6—46.

[ஹரிஜன பந்துவிலிருந்து]

## அறிவிப்பு

சென்ற 25 வருஷங்களாகத் தமிழ்நாடெங்கும் காந்தியத்தைப் பரப்பி தேசபக்தியை வளர்த்து வரும் திரு. பொ. திருகூடசுந்தரம் எம். ஏ. பி. எல். அவர்கள் தமிழ் ஹரிஜன் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து சேவை செய்து வருகிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## காந்தீய அரசியல்

காந்தியடிகளின் சிஷ்யர் திரு. எஸ். என். அகர்வால் எழுதியது. மகாத்மாவின் பாராட்டுரையுடன் கூடியது. நாமக்கல் கவிஞர் தமிழாக்கியது.

உலகத்துக்கு உய்யும் வழியைக் காட்டும்
உன்னதமான நூல்.
விலை ரூபாய் மூன்று
தமிழ்ப்பண்ணை
தியாகராயநகர், சென்னை.

அச்சடித்தவர்: பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 46, அரண்மனைக்காரத் தெரு, ஜி.டி., சென்னை.
பிரசுரித்தவர்: ஸ்ரீராமன், தமிழ்ப்பண்ணை, தியாகராயநகர், சென்னை. நிர்வாக ஆசிரியர்: சின்ன அண்ணாமலை.